**UNIVERSITY OF PERADENIYA**
**CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION**

**ශාස්ත්‍රවේදී උපාධි (බාහිර - නව නිර්දේශය) පරීක්ෂණය 300 මට්ටම - මාර්තු 2025**
**கலைத்தேர்வுப் பரீட்சை (வெளிவாரி -புதிய பாடத்திட்டம்) 300 வது தேர்ச்சி மட்டம் – [redacted] 2025**
**Bachelor of Arts (External - New Syllabus) Examination 300 Level – March 2025**

# (GGYE 302: Regional Geography)

කාලය පැය (03) තුනයි.
மூன்று(03) மணித்தியாலங்கள்.
Time three (03) Hours.

නොපැහැදිලි අත් අකුරුවලට ලකුණු කපනු ලැබේ.
எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.
Marks will be deducted for illegible hand writing.

ප්‍රශ්න 04 පිළිතුරු සපයන්න.
04 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.
Answer 04 questions only.

මෙම ප්‍රශ්න පත්‍රයේ අඩංගු ප්‍රශ්න සංඛ්‍යාව 08 කි.
இந்த வினாப்பத்திரத்தில் 08 வினாக்கள் உள்ளன.
There are 08 questions in the question paper.

---

1 ‘பிராந்திய’ எண்ணக்கருவினையும் ‘பிராந்தியங்களின் வகைகளையும்’ விளக்குக. உலக பிராந்தியங்களில் கவனம் செலுத்தி, இப் பிராந்தியங்களைப் பற்றிக் கற்பதன் முக்கியத்துவத்தினை விளக்குக. — 25 புள்ளிகள்

2. (a) ‘இடம்’ மற்றும் ‘பிராந்தியம்’ என்பவற்றுக்கிடையில் வேறுபாடுகள் இருக்கின்றதா? விளக்குக. — 10 புள்ளிகள்

(b) இலங்கையிலிருந்து ஏதாவது மானிட அல்லது பௌதிக பிராந்தியத்தினைத் தெரிவு செய்து, ஏனைய பகுதிகளிலிருந்து குறித்த பிராந்தியத்தின் சார்பு ரீதியான தனித்துவத்தினைக் கலந்துரையாடுக. — 15 புள்ளிகள்

3 (a) வேறுபட்ட நாடுகள் ஒருங்கிணைந்து ஐரோப்பிய பிராந்தியமாக செயற்படுவதற்கு மேற்கொண்ட முயற்சிகளை ஐரோப்பிய ஒன்றியத்தில் (EU) கவனம் செலுத்துவதன் மூலம் கலந்துரையாடுக. — 10 புள்ளிகள்

(b) ஐரோப்பா தற்போது எதிர் கொள்கின்ற முதியோர் பிரச்சினையினை ஆராய்க. — 15 புள்ளிகள்

4. ரஷ்யாவையும் புதிதாக சுதந்திரம் அடைந்த நாடுகளையும் எவ்வாறு ஒரு தனிப் பிராந்தியமாக அடையாளம் காண்பீர் என விளக்கி, அந்த நாடுகள் தற்போது எதிர்கொள்கின்ற பிரச்சினைகளைக் கலந்துரையாடுக. — 25 புள்ளிகள்

5 தென் அமெரிக்க பிராந்தியத்தின் சூழலிற் பன்முகத்தன்மையினை விளக்கி, அமேசன் காடுகளின் தற்போதய நிலை மற்றும் பிரச்சினைகளை ஆராய்க. — 25 புள்ளிகள்

6 உபசகாரா ஆபிரிக்காவின் பௌதிக கட்டமைப்பினை விளக்கி, மனித நடவடிக்கைகளுக்கான அப்பிராந்தியத்தின் சவால்களைக் கலந்துரையாடுக. — 25 புள்ளிகள்

7 (a) உலகின் பொருளாதார ரீதியாக வலுவான பிராந்தியமாக கிழக்காசியா எவ்வாறு மாறிவருகின்றது என்பதனை விளக்குக. — 15 புள்ளிகள்

(b) இப்பிராந்தியத்தில் பொருளாதார ஒருங்கிணைப்பில் எதிர்கொள்கின்ற சவால்களைக் கலந்துரையாடுக. — 10 புள்ளிகள்

8 பின்வருவனவற்றுள் **ஏதாவது மூன்றிற்கு** சுருக்கக் குறிப்பு வரைக: — 25 புள்ளிகள்

(அ) சனத்தொகை மீள்நிரப்பு வீதம்
(ஆ) இலங்கையின் பருவகால வறுமை
(இ) ஒரு பிராந்தியமாக மத்திய மலைப் பகுதிகள்
(ஈ) றிச்சட் ஹாட்சோன் (Richard Hartshorne)
(e) காஷ்மீர் முரண்பாடு
(ʃ) தென்னாசியாவின் சமூக சமத்துவமின்மை